JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **201/2015** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 3** | Prosecution /Defence / Court | |
| Name | சாந்தாமணி | Village | முருகம்பாளையம், விஜயமங்கலம் |
| Husband's Name | ராஜ் | Taluk | |
| | | Age | |

**A2 present. A1, A3 absent. Petition filed and allowed.**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 24.02.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு பனியன் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் மகன் ஆவார். அ.சா.2 என் கணவர் ஆவார். தேதி , வருடம் , மாதம் நினைவில் இல்லை. சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு நான் வீட்டில் சமைத்துக் கொண்டிருந்தேன். அப்போது வெளியே சத்தம் கேட்டது நான் வெளியே வந்து பார்த்த போது துரை என்கிற கருப்புசாமி என் மகளின் காதை கடித்துக் கொண்டிருந்தார். நான் சென்று விலக்காட்டும் போது அ.சா.1 என் மகனின் முதுகிலும், கையிலும் கடித்து விட்டார். ஆஜரில் உள்ள 2 ம் எதிரி தனலட்சுமியை எனக்கு தெரியும். 3 ம் எதிரி மஞ்சுளா தனலட்சுமியின் மகள் ஆவார். அவர்கள் சம்பவத்தின் போது இருந்தார்களா என்று எனக்கு தெரியாது. சம்பவத்தின் போது வேறு யார் யார் இருந்தார்கள் என்று கவனிக்கவில்லை. 2 மற்றும் 3 ம் எதிரிகள் ஆரம்பத்தில் நாங்கள் குடியிருந்த வீட்டிற்கு பக்கத்தில் குடியிருந்தார். அதன் பின்னர் அ.சா.1 என் மகனையும், என் மகளையும் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்று விட்டார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சி அ.சா. 3 பகுதி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டு அதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறது.**

1. 15.03.2015 ம் தேதி இரவு 7.00 மணிக்கு என் மகள் மீது துரை என்கிற கருப்புசாமி வண்டியில் வேகமாக மோதுவது போல் வந்தார் என்றும் அதை பார்த்த எனது மகன் எதற்காக வேகமாக ஓட்டி எனது அக்கா மீது மோதுவது போல் வருகிறாய் என்று கேட்டதாகவும், அதற்கு துரை என்கிற கருப்புசாமி அ.சா.1 என் மகனை பார்த்து அப்படி தான் ஓட்டுவேன் தேவுடியா பையனே என்ற கெட்ட வார்த்தையால் திட்டினார் என்றால் சரியல்ல. கீழே தள்ளிவிட்ட போது ஆஜர் எதிரியும், 3ம் எதிரி மஞ்சுளாவும் ஓடி வந்து எனது மகளை கீழே தள்ளி கையால் அடித்தார்கள் என்றால் சரியல்ல. அதைப் பார்த்த நானும், எனது கணவரும், எனது மருமகனும், ஊர்க்காரர்களும் தடுக்காட்டி விட்டோம் என்றால் சரியல்ல. பின்னர் துரை என்கிற கருப்புசாமி என் மகனை பார்த்து இந்த முறை தப்பித்துக் கொண்டாய் என்று கொலை மிரட்டல் செய்தார் என்றால் சரியல்ல. ஆஜர் 2 ம் எதிரி மற்றும் 3 ம் எதிரி மஞ்சுளா எனக்கு தெரிந்தவர் என்பதால் அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டி அவர்கள் சம்பவ இடத்தில் இருந்தார்களா என்று தெரியவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** என் மகள் வீட்டிற்கும் துரை என்கிற கருப்புசாமி வீட்டிற்கும் முன் விரோதம் உள்ளதா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை